செ.கு. எண் 8

நாள் 19-01-2010

# மின்கட்டண மாற்றம் பற்றி

# தமிழ்நாடு மின்சார வாரியம் விளக்கம்.

மின் கட்டணத்தை உயர்த்த மின் வாரியம் அதிரடி முடிவு செய்திருப்பதாக இன்று காலையில் ஒரு செய்தி வந்துள்ளது. அது பற்றிய முழு விளக்கத்தை மக்களுக்கு அளிக்க விரும்புகின்றோம். இந்தச் செய்தி வெளி வந்துள்ள பத்திரிகையிலேயே தலைப்பில் ஏழு ஆண்டுகளுக்குப் பின் கட்டணம் உயருகிறது என்றும் எழுதியுள்ளது. எனவே ஏழு ஆண்டுகளாக மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மேலும் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள பத்திரிகை தமிழ்நாடு மின்சார வாரியம் 5,000 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கி வருகிறது. இந்த நட்டத்தைக் குறைக்கும் வகையில் மின் கட்டணத்தை உயர்த்துவது தவிர்க்க முடியாததாக உள்ளது என்றும் சொல்லியுள்ளது. மின் கட்டணத்தை மின் வாரியம் உயர்த்த வேண்டுமென்றால், மின்வாரியம் தானாக மின் கட்டணத்தை அதிரடியாக உயர்த்தி விட முடியாது. மின்சார ஒழுங்கு முறை ஆணையம் என்று உள்ளது. அந்த ஆணையத்திடம் மின்வாரியம் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றால் அதைப் பற்றிய விவரத்தை கோரிக்கையாகத் தயாரித்து சமர்ப்பிக்கும். அதன் பின்னர் ஆணையம் அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து, பொதுமக்களிடம் அதைப் பற்றிய கருத்துக்களைக் கேட்கும். அவ்வாறு கருத்து கேட்பு நிகழ்ச்சி நடந்து முடிந்த பிறகு, ஆணையம் அதிலே மன நிறைவு பெற்றால், அதன் பின்னர் மின்வாரியத்திற்கு கட்டணத்தை உயர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கும். அதன் பின்னர் தான் மின் கட்டண உயர்வு அமலுக்கு வரும்.

இந்த வகையில் தற்போது மின் வாரியம், அந்த ஆணையத்திடம் நேற்றையதினம் மின் கட்டண உயர்வு நடைபெற்று ஏழாண்டுகள் ஆகி விட்டது, மின்வாரியம் நட்டத்திலே உள்ளது, எனவே தாங்கக் கூடிய ஒரு சிலருக்கு மட்டும் மின் கட்டணத்தை ஓரளவு உயர்த்திக் கொள்ளலாமா என்று அனுமதி கேட்டு கோரிக்கை மனுவினை தாக்கல் செய்துள்ளது. அதாவது சாதாரண மக்களுக்கோ, நடுத்தர மக்களுக்கோ எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் தான் மின் கட்டணத்தை உயர்த்தலாமா என்று கோரிக்கை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதைத் தான் மின் கட்டணத்தை உயர்த்த அதிரடி முடிவு என்று செய்தியாக வெளியிட்டுள்ளார்கள்.

மின்வாரியம் ஆணையத்திற்கு செய்துள்ள முறையீட்டில் கூட அனைத்துத் தரப்பினருக்கும் மின் கட்டணத்தை உயர்த்தப் போவதாகச் சொல்லவில்லை. வீடு, விவசாயம், வணிகம், தொழிற்சாலை உள்ளிட்ட 13 இனங்களாக பிரிக்கப்பட்டு தற்போது மின் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. இதில் குடிசைகளிலே இருப்பவர்களுக்கும் – தெரு விளக்குகளுக்கும் – வழிபாட்டு இடங்களான கோவில், மசூதி, தேவாலயம் போன்றவைகளுக்கும் – விசைத்தறி, கைத்தறி நெசவாளர்களுக்கும் எந்தவிதமான மாற்றமும் மின் கட்டணத்திலே செய்யப் போவதில்லை. 1500 யூனிட்டுகளுக்குக் குறைவாகப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கும் மின் கட்டணத்திலே எந்த விதமான உயர்வும் செய்யப் போவதில்லை. விவசாயிகளுக்குத் தரப்படும் இலவச மின்சாரத்திலே எந்தவிதமான மாறுதலும் கிடையாது. வணிக நிறுவனங்களைப் பொறுத்தவரையில் 200 யூனிட் வரை பயன்படுத்து வோருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யக் கோரப்படவில்லை.

மாதம் 200 யூனிட்டுகள் வரை, அதாவது, இரண்டு மாதங்களுக்கு 400 யூனிட் வரை வீடுகளிலே மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தில் எந்தவிதமான உயர்வும் செய்யப் போவதில்லை. தமிழகத்தில் தற்போது 2 கோடியே, 5 இலட்சத்து 16 ஆயிரம் மின் இணைப்புகள் உள்ளன. அவற்றில் வீடுகளுக்கு மின் இணைப்பு பெற்றவர்கள் மட்டும் 1 கோடியே 38 இலட்சம் பேர்களாகும். இவர்களில், மாதம் 200 யூனிட்டுகளுக்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்துவோர் 1 கோடியே 20 இலட்சம் பேர்களாகும். எனவே, இந்த 1 கோடியே 20 இலட்சம் பேர்களுக்கு, அதாவது, வீடுகளுக்கு மின்சாரம் பயன்படுத்துவோரில் 90 சதவிகிதம் பேர்களுக்கு எந்தவிதமான கட்டண உயர்வும் கோரப்படவில்லை. திரைப்பட அரங்குகள், திரைப்பட ஸ்டுடியோக்கள், தனியார் கல்லூரிகள் போன்றவைகளுக்கு ஓரளவு மின் கட்டணத்தை உயர்த்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

ஏழாண்டு காலமாக தமிழகத்தில் மின் கட்டணத்தில் எந்தவிதமான உயர்வும் செய்யப்படவில்லை. அதன் காரணமாக மின்வாரியம் மிகப் பெரும் அளவிற்கு நட்டத்திலே இயங்கி வருகிறது. அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கி குறைந்த விலையில் ஏழையெளிய மக்களுக்கும், இலவசமாகவே விவசாயி களுக்கும் மின்சாரம் தமிழகத்திலே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தமிழகத்திலே தற்போது வசூலிக்கப்படும் மின் கட்டணம் என்பது இந்தியாவிலே உள்ள அனைத்து மாநிலங்களையும் விட குறைவான கட்டணமாகும். எனவே தவிர்க்க முடியாத நிலையில் மின்வாரியம் மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு இப்படியொரு கோரிக்கை மனுவினை வைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகியுள்ளது. இந்தக் கோரிக்கையினை ஆணையம் பரிசீலனை செய்து, பொது மக்களிடம் கருத்து கேட்பு நடத்தி அதன் பிறகுதான் தன்னுடைய முடிவினை அறிவிக்கும். அதன்பின் அரசு உரிய

முடிவுகளை எடுத்து, பெரும்பான்மை நுகர்வோர்களான சாமான்ய மக்கள் மற்றும் நடுத்தரப் பிரிவினர் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். அதற்குள்ளாகவே மின்வாரியம் கட்டணத்தை உயர்த்த அதிரடி முடிவெடுத்து விட்டதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு மக்களைக் குழப்பிடத் தேவையில்லை என்பதற்காகவே இந்த விளக்கம் தரப்படுகின்றது.

தலைவர்,

19–1–2010. தமிழ்நாடு மின்சாரவாரியம்.

4/4

...ளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9